The Hindu (Tamil)

Dated: 28.10.2024

தேர்தல் ஆணைய உத்தரவுப்படி

# வரைவு வாக்காளர் பட்டியல் நாளை வெளியீடு

**பெயர் சேர்த்தல், முகவரி மாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்**

● சென்னை

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் நாளை வெளியிடப்படுகிறது. திருத்த பணிகள் நாளை முதலே தொடங்க உள்ளதால், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல், முகவரி மாற்றம் உள்ளிட்டவற்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

வரும் 2025 ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி, வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை வாக்குச்சாவடி நிலை அலுவலர் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட பணிகள் கடந்த ஆகஸ்ட் 20-ம் தேதி தொடங்கி கடந்த 18-ம் தேதி வரை நடைபெற்றன.

இந்நிலையில், தேர்தல் ஆணைய உத்தரவுப்படி, வரைவு வாக்காளர் பட்டியல் நாளை (அக்.29) வெளியிடப்படுகிறது. அதைத் தொடர்ந்து, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பட்டியலில் ஏற்கெனவே உள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தம், இடமாற்றம் செய்தல், ஆதார் எண் இணைப்பு உள்ளிட்டவற்றுக்கு நாளை முதலே விண்ணப்பங்கள் பெறப்படும். அதற்கு படிவங்கள் 6, 6பி, 7, 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு நவம்பர் 28-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் விண்ணப்பங்களை அளிக்கலாம். https://voters.eci.gov.in என்ற இணையதளம், 'VOTER HELPLINE' என்ற கைபேசி செயலி மூலம் ஆன்லைனிலும் விண்ணப்பிக்கலாம்.

**சனி, ஞாயிறு சிறப்பு முகாம்**

பொதுமக்கள் வசதிக்காக தமிழகம் முழுவதும் உள்ள 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம் நவம்பர் 9, 10, 23, 24-ம் தேதிகளில் (சனி, ஞாயிறு) நடைபெறும். இந்த முகாம்களில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம். இவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் டிசம்பர் 24-ம் தேதிக்குள் பரிசீலிக்கப்பட்டு, 2025 ஜனவரி 6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

The Hindu (Tamil)

Dated: 28-10-2024

# வாக்காளர் பட்டியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுதான் என்ன?

வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளும் பணி அக்டோபர் 29 அன்று தொடங்கும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதை ஒட்டி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு சென்னையில் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்தில், இறந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைப் பெரும்பாலான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருப்பது விவாதப் பொருளாகியுள்ளது. இந்த விஷயத்தில் பிற துறைகளுடன் இணைந்து பணியாற்றுவதில் தேர்தல் ஆணையம் சுணக்கம் காட்டுகிறதா என்கிற கேள்வியும் எழுகிறது.

அரசியல் கட்சிகளின் கருத்துகளைக் கேட்பதற்காக நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் திமுக, அதிமுக, பாஜக உள்ளிட்ட பெரும்பாலான கட்சிகளின் பிரதிநிதிகள், இறந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டி அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டவர்களின் பெயர்கள்கூடப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தீவிரமானவை.

வாக்காளர் பட்டியலில் இறந்தவர்களின் பெயர்கள் இடம்பெறுவதை எளிதாகத் தவிர்க்க முடியும். மரணமடைந்தவர்களின் உறவினர்கள் இறப்புச் சான்றிதழை உள்ளாட்சி நிர்வாகங்களிடம் பெறுவது வழக்கமான நடவடிக்கையாகிவிட்டது. அதற்காக இறந்தவரின் ஆதார் எண்ணும் கட்டாயமாகப் பெறப்படுகிறது. எனவே, அந்தச் சான்றிதழின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் இறந்தவர்களின் பெயர்களைப் பட்டியலிலிருந்து எளிதாக நீக்கிவிட முடியும். இதில் தேர்தல் ஆணையம் உள்ளாட்சி நிர்வாகங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றினாலே போதுமானது. ஆனால், இதில் தொடர்ச்சியாகத் தவறுகள் நேர்வதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள், அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதில் தேர்தல் ஆணையம் ஆர்வம் காட்டவில்லையோ என்னும் கேள்வியை எழுப்புகின்றன.

இதேபோலத் தகுதிவாய்ந்த வாக்காளர்களின் பெயர்கள் விடுபடுவது, ஒரே நபரின் பெயர் வெவ்வேறு தொகுதிகளில் இடம்பெறுவது போன்ற பிரச்சினைகள் நீண்ட காலமாகவே தீர்க்கப்படாமல் தொடர்கின்றன. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி யுகத்தில் எளிதாகத் தீர்க்கப்பட வேண்டிய இந்தப் பிரச்சினைகள் இன்றுவரை நீடிப்பது தேர்தல் ஆணையத்தின் பணிகளில் நிலவும் குறைபாடுகளாகவே பார்க்கப்படுகிறது. இன்னொரு புறம், பல ஆண்டுகளாக வாக்களித்தும் தேர்தல் நாளில் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து விடுபட்டதாக வாக்காளர்கள் கூறும் புகார்களும் வரவே செய்கின்றன. எனவே, இதில் தேர்தல் ஆணையம் சிறப்புக் கவனம் செலுத்தி, முறையான விசாரணையை மேற்கொண்ட பிறகு, வாக்காளர் பெயரைப் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும். இதற்கு அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்,

மேலும், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளுக்காக நவம்பர் மாதத்தில் நான்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. முகாம்கள் நடப்பது ஒரு புறம் இருந்தாலும், வாக்காளர்களைத் தேடிச் சென்று விசாரித்து பெயர்களை இணைப்பதிலும், நீக்குவதிலும் தேர்தல் ஆணையம் கவனம் செலுத்துவது அவசியம். குறிப்பாக 18 வயதைக் கடந்தவர்கள், 17 வயது பூர்த்தியானவர்களை வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும். ஏற்கெனவே, கல்லூரிகள் உள்ளிட்ட உயர் கல்வி நிலையங்களின் வாயிலாக இளம் வாக்காளர்களைச் சேர்க்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டாலும், அவற்றை உறுதியுடன் செயல்படுத்துவதில் தேர்தல் ஆணையம் அக்கறை காட்ட வேண்டும்.

வாக்குப்பதிவை அதிகரிக்கும் முனைப்பைத் தேர்தல் நடத்தப்படும் காலத்தில் மட்டும் தேர்தல் ஆணையம் முன்னிலைப்படுத்துகிறது. வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின்போதும் அதற்கான உரிய கவனத்துடன் செயல்படுவது மட்டுமே 100% வாக்குப் பதிவு என்னும் இலக்கை அடைய உதவும்.

Daily Thanthi
Dated: 28.10.2024

### பதிவு பெற்ற அரசியல் கட்சியாக

# தமிழக வெற்றிக்கழகத்துக்கு தேர்தல் கமிஷன் அங்கீகாரம்

புதுடெல்லி, அக்.26-
நடிகர் விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கினார். இதனை டெல்லியில் உள்ள இந்திய தேர்தல் கமிஷன் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்து இருந்தார். இதற்கிடையே கட்சியின் முதல் மாநில மாநாடு நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது.

கட்சிக்கான பதிவில் எதிர்ப்புகள் இருந்தால் அதை ஜூன் மாதம் 11-ந் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என தேர்தல் கமிஷன் கால அவகாசம் அளித்தது. ஆனால் எதிர்ப்புகள் எதுவும் இல்லை என தெரிகிறது.

இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தை பதிவு பெற்ற அரசியல் கட்சியாக ஏற்றுக்கொண்டதாக தேர்தல் கமிஷன் அறிவித்து உள்ளது. இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டு இருக்கிறது.

தமிழக வெற்றிக்கழகத்தைப் போல மேலும் 39 கட்சிகள் தேர்தல் கமிஷனில் சமீபத்தில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதன்மூலம் தேர்தல் கமிஷனில் பதிவு பெற்ற, ஆனால் அங்கீகாரம் பெறாத அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 765 ஆகி உள்ளது.

பதிவு பெற்ற அரசியல் கட்சிகள் தேர்தலில் பங்கேற்க வேண்டும். சட்டசபை தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற தேர்தலாக இருந்தாலும் சரி, குறைந்தது 6 சதவீத வாக்குகளை அது பெற்று, 2 எம்.எல்.ஏ.க்கள் அல்லது ஒரு எம்.பி.யை கொண்டிருந்தால் அந்த கட்சிக்கு அங்கீகாரம் வழங்கப்படும்.

நாட்டில் தற்போது பா.ஜனதா, காங்கிரஸ், ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மற்றும் தேசிய மக்கள் கட்சி என 6 கட்சிகள் தேசிய கட்சிகளுக்கான அங்கீகாரத்தில் உள்ளன. மாநில கட்சிகளைப் பொறுத்தவரை 58 கட்சிகள் அங்கீகாரம் பெற்று இருக்கின்றன.